## <u>சுருக்கம்</u>

2011– 2012 ஆம் கல்வியாண்டிற்கான ஆசிரியர் காலிப்பணியிடங்கள் நிரப்புதல் – தொடக்கக்கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பள்ளிகளில் காலியாகவுள்ள பட்டதாரி ஆசிரியர், இடைநிலை ஆசிரியர் மற்றும் உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப அனுமதி அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக்கல்வித் (வ.செ.2) துறை**

**அரசாணை (நிலை) எண். 170** **நாள் 02 .11.2011**

**படிக்கப்பட்டவை:-**

தொடக்கக்கல்வி இயக்குநரின் கடித எண். 6025/டி1/10, நாள் 27.4.2011 மற்றும் 5.07.2011

-----

**<u>ஆணை:-</u>**

தொடக்கக்கல்வி இயக்குநர் மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், தொடக்கக்கல்வித் துறையின் கீழுள்ள தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 2011–2012 ஆம் கல்வியாண்டில் 01.06.2011 அன்று நிரப்பத் தகுதியுள்ள பட்டதாரி ஆசிரியர், இடைநிலை ஆசிரியர் மற்றும் உடற்கல்வி ஆசிரியர் காலிப்பணியிடங்களை உரிய விதிமுறைகளின்படி பதவி உயர்வு மற்றும் நேரடி நியமனம் மூலம் நிரப்பிக் கொள்ள அரசின் அனுமதியைக் கோரியுள்ளார்.

2. தொடக்கக்கல்வி இயக்குநரின் கருத்துருவை அரசு நன்கு ஆய்வு செய்தது. 01.06.2011 அன்றைய நிலவரப்படி ஏற்பட்டுள்ள காலிப்பணியிடங்களை, பின்வருமாறு, பதவி உயர்வு மற்றும் நேரடி நியமனம் மூலம் நிரப்பிக்கொள்ள தொடக்கக் கல்வி இயக்குநருக்கு அனுமதியளிக்கலாம் என கருதி அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

| வ. எண் | பணியிடம் | 1.6.2011ன்படி பணியிடங்களின் எண்ணிக்கை | பதவி உயர்வின் மூலம் நிரப்புதல் | நேரடி நியமனம் மூலம் நிரப்புதல் |
|---|---|---|---|---|
| 1 | பட்டதாரி ஆசிரியர் | 1366 | 124 | 1242 |
| 2 | இடைநிலை ஆசிரியர் | 1886 | --- | 1886 |
| 3 | உடற்கல்வி ஆசிரியர் | 7 | --- | 7 |
| | மொத்தம் | 3259 | 124 | 3135 |

3. மேற்காண் காலிப்பணியிடங்கள் அனைத்தையும் நடைமுறையில் உள்ள விதிமுறைகளின்படி உடனடியாக நிரப்ப நடவடிக்கை எடுக்குமாறு, தொடக்கக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.சபிதா
அரசுச் செயலாளர்

பெறுநர்
தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை – 6.
தலைவர், ஆசிரியர் தேர்வு வாரியம்,சென்னை – 6.

நகல்
மாண்புமிகு பள்ளிக்கல்வி அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
முதன்மைச் செயலரின் தனிச் செயலாளர்,
பள்ளிக்கல்வித்துறை சென்னை – 9.
பள்ளிக்கல்வித்துறை (அனைத்துப் பிரிவுகள்), சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 2/11/2011